தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 18-9-2018

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவையில் செப்டம்பர் 5 ஆம் தேதியன்று நடை பெற்ற தேசிய அளவிலான தேனீ வளர்ப்பு மேம்பாட்டுக் குழுக் கூட்டம்**

பாரதப் பிரதமரின் பொருளாதார ஆலோசனைக் குழுவின் கிழ் அமைக்கப் பட்ட தேசிய அளவிலான தேனீ வளர்ப்பு மேம்பாட்டுக் குழுக் கூட்டம் தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவையில் செப்டம்பர் 5 ஆம் தேதியன்று நடை பெற்றது.

பாரதப் பிரதமரின் பொருளாதார ஆலோசனைக் குழுவின் தலைவர் மற்றும் மத்திய அரசின் நிதி ஆயோக் அமைப்பின் உறுப்பினரான பத்ம ஸ்ரீ முனைவர் விவேக் தேப்ராய் இந்தக் கூட்டத்தினைத் தலைமை தாங்கி நடத்தினார். பொருளாதார ஆலோசனைக் குழுவின் செயலர் மற்றும் நிதி ஆயோக் அமைப்பின் முதன்மை ஆலோசகரான திரு. ரத்தன் வட்டால், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் முனைவர் கு. ராமசாமி, பொருளாதார ஆலோசனைக் குழுவின் ஆலோசகர் திரு. ராஜேஸ்வர ராவ், மத்திய அரசின் தேசிய தேனீ வாரியத்தின் நிர்வாக இயக்குனர் திரு. பி.எல். சரஸ்வத், தென் இந்திய மாநிலங்களான தமிழ் நாடு, கேரளா, ஆந்திரா, கர்நாடகம் மற்றும் புதுச்சேரி ஆகியவற்றின் வேளாண், தோட்டக்கலை மற்றும் கதர் கிராமத் துறைகளின் அதிகாரிகள், தென் இந்திய வேளாண் பல்கலைக் கழகங்களில் பணி புரியும் தேனீ வளர்ப்பு விஞ்ஞானிகள் , தமிழ் நாட்டின் முன்னோடி தேனீ வளர்ப்பாளர்கள் ஆகியோர் இதில் பங்கேற்றனர்.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக பூச்சியியல் பேராசிரியர் முனைவர் மா.இரா. சீனிவாசன் தேனீ வளர்ப்பு மேம்பாடு குறித்த தொழில்நுட்ப விவரங்களை வழங்கினார். தேனீ வளர்ப்பில் உள்ள தென் இந்தியாவின் தேனீ வளர்ப்பாளர்கள், அறிவியலார்கள் மற்றும் வேளாண், தோட்டக்கலை மற்றும் கதர் கிராமத் துறைகளின் அதிகாரிகள் ஆகியோரின் ஆலோசனைகள் பெறப் பட்டன. கூட்டத்தில் உரையாற்றுகையில், குழுத் தலைவர் முனைவர் திரு விவேக் தேப்ராய் விவாதங்கள்

பயனுள்ளதாகவும் சரியான திசையில் இருந்ததகவும் தெரிவித்தார். இந்த குழுவின் பரிந்துரைகளின் மூலம் தேசிய அளவில் தேன் மற்றும் தேனீ சார்ந்த பொருள்களின் உற்பத்தி அதிகரிப்பதுடன் தேனீக்களால் ஏற்படும் அயல் மகரந்த சேர்க்கையினால் பயிர் விளைச்சலும் பன்மடங்காகப் பெருகும். இதன் மூலம் இந்திய அரசின் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கும் முயற்சியும் வெற்றி பெரும் என்று நம்பிக்கை தெரிவித்தார். தமிழ் நாடு வேளாண் பல்கலைக் கழகம் இந்த முயற்சியில் முன்னோடியாக செயல்படுவதைப் பாராட்டினார். முன்னதாக வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் முனைவர் திரு. கு. ராமசாமி கூட்டத்தை வரவேற்றார். பல்கலைக் கழகத்தின் பயிர் பாதுகாப்பு இயக்குனர் திரு. ஏ. எஸ். கிருஷ்ணமூர்த்தி பேச்சாளர்களை அறிமுகப்படுத்தினார். பூச்சியியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் என். முத்துகிருஷ்ணன், நன்றியுரை வழங்கினார்.

சிறந்த எழுத்தாளராகவும், பொருளாதார நிபுணராகவும், திகழும் முனைவர் திரு விவேக் தேப்ராய் தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக மாணவர் மற்றும் ஆசிரியர்களுடன் உரையாடினார். செப்டம்பர் 5 அன்று இந்தக் கூட்டம் நடை பெற்றதால், சிறந்த பொருளாதார பேராசிரியராக திகழ்ந்த திரு விவேக் தேப்ராய் அவர்களுக்கு மாணவர்கள் ஆசிரியர் தின வாழ்த்துக்களை தெரிவித்தனர். பாரத பொருளாதார நிதிநிலை அறிக்கையை 2103 முதல் 2016 வரை நான்காண்டுகள் தயாரிப்பதில் முக்கிய பங்கு வகித்த திரு ரத்தன் வட்டால் அவர்கள் சிறந்த தேசத்தை உருவாக்குவதில் மாணவர்களின் பங்கு குறித்து மாணவர்களிடம் உரையாற்றினார். இந்த குழுவினர் பல்கலைக் கழகத்தின் தேனீ வளர்ப்பு மையம் மற்றும் புதிதாக ஏற்படுத்தப்பட்ட பூச்சிகள் அருங்காட்சியகத்தைப் பார்வையிட்டு பாராட்டுதல்களைத் தெரிவித்தனர்.

மக்கள் தொடர்பு அலுவலர்